DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register **Case No: C.C.No.96/2015** **ALGSC PS**
Sessions
Deposition of witness for :PW-1 LW-2

| | | | |
|---|---|---|---|
| Name | : தர்மராஜ் | Village /Taluk | : |
| Father's Name | : நடராஜன் | Caste /Religion | : |
| or Husband Name: | | Age /Calling | : |

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of 20.01.2021

**முதல் விசாரணை** :

நான் தற்போது காடம்பாடியில் குடியிருந்து வேளாங்கண்ணியில் சொந்தமாக கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எதிரி தாமரைச்செல்வி என்னுடைய அக்கா ஆவார். என்னுடைய அப்பா நடராஜன் 2014ல் இறந்து விட்டார். என்னுடைய அப்பாவிற்கு இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர். அப்பாவின் சொத்தினை எதிரி தாமரைச்செல்வி தான செட்டில்மென்டாக எழுதி வாங்கிக்கொண்டார். எட்டுக்குடி முருகன் கோவிலுக்கு அழைத்துச்செல்வதாக கூறி திருப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் என்னுடைய 80 வயதான தந்தையை மிரட்டி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தான செட்டில்மென்டாக கடந்த 21.02.2013 அன்று எழுதி வாங்கிகொண்டார்கள். எனது தந்தை இதுபற்றி எதிரி தாமரைச்செல்வியிடம் கேட்டபோது அவர்கள் இருவருக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. அப்போது எதிரி தாமரைச்செல்வி என் தந்தைக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லையென்று வெளியே விரட்டிவிட்டார். எனது தந்தை ஆட்டோவில் ஏறி காடம்பாடியில் உள்ள என்னுடைய வீட்டிற்கு வந்து என்னிடம் நடந்தவற்றை கூறினார். மேற்படி பத்திரத்தை பதிவு செய்வதற்கு உறுதுணையாக தியாகராஜன், வழக்கறிஞர் அமர்நாத் ஆகியோர் செயல்பட்டிருப்பது எனக்கு தெரியவந்தது. அதன் பின்னிட்டு நான் என் தந்தையை அழைத்துக்கொண்டு நிலஅபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவு அலுவலகத்தில் 2013ம் ஆண்டு புகார் கொடுத்தேன். போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தியாகராஜன் என்பவரை கைது செய்தார்கள்.

என்னிடத்தில் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு என் தந்தை கொடுத்தது தான்.

அந்த புகாரின் அடிப்படையில் இந்த குற்றசெயலில் ஈடுபட்ட பாலசுப்பிரமணியன், ஆஜர் எதிரி சடாசரம், வழக்கறிஞர் அமர்நாத், தாமரைச்செல்வி , தியாகராஜன் ஆகியோர்களை கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டதன்அடிப்படையில் அவர்கள் முன் பிணையில் சென்றுவிட்டார்கள். அதன் பின்னிட்டு என் தந்தை வேதாரண்யம் நீதிபதி முன்னிலையில் என் தந்தை நடந்த விபரங்கள் அனைத்தையும் வாக்குமூலம் அளித்தார். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u> :**

வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் குறுக்குவிசாரணை இல்லை.